TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8075897

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : ஈரோடு
மாவட்டம்
PS: ஊ.த.க.பிரிவு ஈரோடு
காவல்நிலையம்
Year: 2021
ஆண்டு
FIR No: 13/2021/AC/ED
மு.த.அ. எண்
Date: 23.12.2021
நாள்

2. (i) Act சட்டம்: P.C. Act. 1986 as amended in 2018 — Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: 12 r/w 7(a)
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல் : 22.12.2021 15.45 மணி
Date to : நாள் வரை : 22.12.2021
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் : முதல்
Time to : நேரம் வரை : 23.00 மணி வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 22.12.2021
Time : நேரம் 13.00 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Gd. VCL-IV
Time : நேரம் 22.12.21 15.15 மணி மற்றும் 23.12.21 10.00 மணி

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக சுயமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 4 கி.மீ தென்மேற்கு
Beat Number : —
முறைக் காவல் எண்
(b) Address முகவரி உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள், ஈரோடு மண்டல அலுவலகம், இரண்டாவது தளம், ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், ஈரோடு.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : C. ராஜேஷ்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : C.P. சந்திரன்
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 1971
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : இந்தியன்
நாட்டினம்
(e) Passport No. : —
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : —
வழங்கப்பட்ட நாள்
Place of Issue : —
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation காவல் துணை கண்காணிப்பாளர்
தொழில்
(g) Address ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
முகவரி ஈரோடு

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு. R. நாகராஜன், உதவிசெயற்பொறியாளர், பேரூராட்சிகள், ஈரோடு மண்டலம், 2) திருமதி R. நிவேதா, இளநிலை பொறியாளர் / அலுவலர் (பொறுப்பு), 3) திரு. க. செல்வமூர்த்தி, இளநிலை பொறியாளர், 4) திரு. M. செல்வம் எலக்ட்ரீசியன் 5) திரு. T. ரங்கசாமி ஒப்பந்ததாரர் (தனியார்)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கப்படுகிறது :-

தனித்தாளில் கணினியில் தட்டச்சு செய்து —
— இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Suo motto

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 23.12.21
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 23.12.2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 11.30 hrs

Name: பெயர் C. ராஜேஷ்
Rank: பதவி காவல் துணைக் கண்காணிப்பாளர்
உ.த.த. பிரிவு, பி.கோ

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

<u>சமர்பிக்கப்படுகிறது:</u>

<u>Contents of FIR in Erode V&AC Cr.No.13/2021/AC/ER u/s 7 (a) and 12 r/w 7 (a) of PC Act as amended in 2018.</u>

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தின் மூன்றாவது தளத்தில் உள்ள உதவி செயற்பொறியாளர்கள், பேரூராட்சிகள்,ஈரோடு மண்டல அலுவலகத்தில் திருப்பூர் மற்றும் ஈரோடு பேரூராட்சிகளுக்கு உட்பட்ட கட்டிட வேலைகள் / சாலைப்பணிகள் ஒப்பந்தத்தில், ஒப்பந்ததாரர்களின் தகுதியை தொழில்நுட்ப அடிப்படையில் கூர்ந்தாய்வு செய்து ஒப்பந்ததாரர்களை தேர்வு செய்வதற்காக, ஒப்பந்ததாரர்களிடம் லஞ்சமாக கமிசன் தொகை வசூல் செய்துவருவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் 22.12.2021 ந் தேதி 15.45 மணி முதல் 23.00 மணிவரைஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் சாட்சிகள் 1) திரு.இரா.அறிவழகன், மண்டல துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், பெருந்துறை,ஈரோடு மாவட்டம், 2) திரு.ஜெ.முகமது இத்ரிஸ், முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் இரண்டாவது தளம்,ஈரோடு, திருமதி.எம்.ரேகா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,ஈரோடு மற்றும் காவல் குழுவினருடன் திடீர் தணிக்கை மேற்கொண்டோம். ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலவலகம் மூன்றாவது தளத்தில் உள்ள கிழக்கு கடைசியில் மேற்குபார்த்தவாறு அமைந்துள்ள ஈரோடு மண்டலம், பேரூராட்சிகள், உதவி செயற்பொறியாளர் அலுவலகம் வாசல் கதவு அருகே 15.45 மணிக்கு சென்றபோது, அந்த அலுவலகத்தின் உள்ளே இருந்து கையில் ஒரு ராமர் பச்சை நிற பையுடன் வெளியே வந்த, பின்னர் பெயர் கேட்டு தெரிந்த திரு.செல்வம், மின்பணியாளர், மூலனூர் பேரூராட்சி, திருப்பூர் மாவட்டம் என்பவரை தடுத்து நிறுத்தி விசாரித்தபோது, அவர் வசம் வைத்திருந்த பையில் TNPL A4 size Paper வைக்கும் கவருக்குள் கத்தை கத்தையாக பணம் காணப்பட்டது. அதைப்பற்றி விசாரிக்க அவர் அந்த பணமானது, திரு.செல்லமுத்து, இளநிலை பொறியாளர், திருமுருகன் பூண்டி பேரூராட்சி, திருப்பூர் மாவட்டம் என்பவர் தன்னிடம் கொடுத்து கீழே காத்திருக்க சொல்லி அனுப்பிவைத்ததாக தெரிவித்தார். பின்னர் அவரையும் அழைத்துக்கொண்டு, உதவி செயற்பொறியாளர்கள், பேரூராட்சிகள் அலுவலகத்தினுள் நுழையப்பட்டது. திரு.செல்வம், மின்பணியாளர் வைத்திருந்த தொகைகள் பற்றி முன்அறையில் இருந்த செல்லமுத்து, இளநிலை பொறியாளர் என்பவரை விசாரித்தபோது, காண்ட்ராக்டர்கள் கொடுத்த பணம் என்றும், ஒப்பந்ததாரர்களை தொழில்நுட்ப அடிப்படையில் கூர்ந்தாய்வு செய்து, தேர்வு செய்தமைக்காக கமிசனாக கொடுத்த பணம் என்றும், மேற்படி பணம் திருப்பூர் உதவி செயற்பொறியாளர் மேனகா

அவர்களுக்கு கொடுக்கவேண்டிய பணம் என்றும் தெரிவித்தார். மேற்படி பேப்பர் கவரை துணிப்பையில் இருந்து பணத்துடன் வெளியே எடுத்து சாட்சிகளின் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது, அதில் கத்தைகத்தையாக 500 ரூபாய் நோட்டு கட்டுகள் 16 இருந்தன. அதில் 15 நோட்டு கத்தைகளில் ஒவ்வொன்றிலும் தலா 100 நோட்டுகளும், ஒரு கத்தையில் 80 நோட்டுக்களும் ஆக மொத்தம் ரூ.7,90,000/- (500 X 1580) இருந்தது. அந்த அலுவலகத்தில் முன் அறையில் இருந்த திருமதி.நீலாவதி, இளநிலை பொறியாளர் / வரைவாளர் (பொறுப்பு) என்பவரிடம் காண்ட்ராக்டர்களிடமிருந்து பெற்ற பணம் சம்மந்தமாக விசாரித்தபோது, அவர் அன்றையதினம் திரு.கிருஷ்ணமூர்த்தி, பிரியா என்ஜினீயரிங் கன்ஸ்ட்ரக்சன்ஸ் பார்ட்னர் மற்றும் திரு.செங்கோட்டையன், பாலாஜி அன்ட் கோ பார்ட்னர் ஆகியோர்களை முறையே 98426 86533 மற்றும் 98427 09798 ஆகிய செல்போன் எண்களுக்கு தனது செல்போன் நம்பர் 99421 80611 லிருந்து தொடர்புகொண்டு, அவர்கள் தரவேண்டிய கமிசன் தொகை முறையே ரூ.31.19 லட்சம் மற்றும் ரூ.12.23 லட்சம் தர சொல்லி கேட்டதாகவும், அதற்கு அவர்கள் அலுவலகத்திற்கு ஒரு நபரை அனுப்பி பணத்தை பெற்றுக்கொள்ளுமாறு சொன்னதாகவும், அதன்பேரில் இந்த அலுவலகத்தில் தற்காலிகமாக வேலை செய்துவரும் தனிநபர் வெங்கடேஷ்பிரபு என்பவரிடம் செல்போனில் தொடர்புகொண்டு, மேற்படி இரண்டு அலுவலகங்களுக்கும் சென்று மேற்படி பணத்தை பெற்றுவருமாறு கேட்டுக்கொண்டதாகவும், அதன்படி அவரும் மேற்படி அலுவலகங்களுக்கு சென்று பணத்தை பெற்று வந்து தன்னிடம் செல்போனில் தகவல் சொன்னதாகவும், அந்த தகவலை உதவி செயற்பொறியாளர் திரு.நாகராஜன் அவர்களிடம் அவரது செல்போன் எண் 78240 58033 க்கு கூப்பிட்டு சொன்னதாகவும், அவரும் அந்த பணத்தை அவருடைய காரில் வைக்க சொல்லி சொன்னதாகவும், அந்த தகவலை தான் வெங்கடேஷ்பிரபுவிடம் சொன்னதாகவும், அதன்படி அவரும் பணத்தை உதவி செயற்பொறியாளரது காரில் வைத்துவிட்டு தன்னிடம் வந்து தகவல் சொன்னதாகவும் தெரிவித்தார். பின்னர் அந்த அலுவலகத்திலிருந்த வெங்கடேஷ்பிரபு த/பெ தங்கவேல் என்பவரை விசாரித்தபோது, அவர், திருமதி.நீலாவதி சொன்னதின்பேரில், தான் மேற்கண்ட இரண்டு அலுவலகங்களுக்கும் சென்று பிரியா என்ஜினீயரிங் கன்ஸ்ட்ரக்சன்ஸ் நிறுவனத்திலிருந்து ரூ.31.19 லட்சமும், பாலாஜி அன்ட் கோ நிறுவனத்திலிருந்து ரூ.12.23 லட்சம் ரூபாயும் பெற்றுவந்து உதவி செயற்பொறியாளர் திரு.நாகராஜன் அவர்களின் TN 38 CV 6636 என்ற பதிவெண் கொண்ட Hyundai Creta காரில் வைத்ததாக தெரிவித்தார். பின்னர் அந்த அலுவலகத்தில் உள் அறையில் இருந்த உதவி செயற்பொறியாளர் திரு.நாகராஜன் அவர்களிடம் மேற்படி அவரது காரில் வைக்கப்பட்ட பணம் சம்மந்தமாக விசாரித்தபோது அவர் மதிய உணவிற்கு தான் தற்காலிகமாக தங்கியிருக்கும் ரூமிற்கு சென்றதாகவும், அப்போது,ரூ.31.19 லட்சம் மற்றும் ரூ.12.23 லட்சம் கொண்ட கவர்களை அங்கு வைத்துவிட்டு வந்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் மேற்படி பணங்களை ஆஜர் படுத்த

கேட்டுக்கொண்டபோது, அவர் தன்னை அனுமதித்தால் மேற்படி பணங்களை எடுத்து வந்து ஆஜர் செய்வதாக தெரிவித்தார். பின்னர் சாட்சிகள் 1) திரு.இரா.அறிவழகன், மண்டல துணை வட்டாட்சியர், 2)திரு.ஜெ.முகமது இத்ரிஸ், முதுநிலை வருவாய் ஆய்வாளர், உதவி செயற்பொறியாளர் திரு.நாகராஜன் மற்றும் குழுவினருடன் காவல் துணை கண்காணிப்பாளர் புறப்பட்டார். மேற்படி நாகராஜன் அவாது Hundai Creta காரில் செல்ல அவரை காவல் வாகனத்தில் மற்றவர்கள் பின்தொடர்ந்து செல்லப்பட்டது. அவர் ஈரோடு, வீரப்பன்பாளையம், சுப்பாயம்மாள் நகரில் கதவு எண் 9/4 கொண்ட கட்டிடத்தில் முதல் தளத்தில் உள்ள அறை எண் 7க்கு அழைத்து சென்று அவரிடமிருந்த அறை சாவியை பயன்படுத்தி கதவை திறந்து உள்ளே சென்று இரண்டு பச்சை நிற கூரியர் கவர்களை 16.45 மணிக்கு எடுத்துவந்து, இது தான் பிரியா என்ஜினீயரிங் கன்ஸ்ட்ரக்சன்ஸ் மற்றும் பாலாஜி அன்ட் கோ நிறுவனத்தினர்களால் கொடுக்கப்பட்ட தொகைகள் ரூ.31.19 லட்சம் மற்றும் ரூ. 12.23 லட்சம் என்று தெரிவித்தார். பின்னர் மேற்படி பணத்துடன் கூடிய கவர்களுடன் அவரையும் அழைத்துக்கொண்டு, முன்பு போலவே திரும்ப மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகம், பேரூராட்சிகள்,ஈரோடு மண்டலம் அலுவலகத்திற்கு வந்து, அவர் எடுத்துவந்த இரண்டு பச்சை நிற கூரியர் கவர்களை பார்வையிடப்பட்டது. அதில் பச்சை நிற 40 X 47 cms சைஸ் அளவுள்ள கவரை பார்வையிட, அதில் பென்சிலால் "Erode Distirct Sivagiri Town Panchayat KNMT-Weekly Sandy Rs-31.19 Lakhs" என்று சிறிய வெள்ளை தாளில் எழுதி ஒட்டப்பட்டிருந்தது. அதனை திறந்து உள்ளே பார்வையிட அதில் ஒரு A4 வெள்ளை தாளில் " Erode – District – Sivagiri Town Panchayat weekly Sandy – 31.19 Lakhs" என்று பென்சிலால் எழுதப்பட்டிருந்தது. மேலும் அதில் 3 பச்சைநிற A4 சைஸ் கூரியர் கவர்கள் இருந்தன. முதல் கவரில் ஒரு புறத்தில் பென்சிலால் " Erode District } Sivagiri – KNMT Weekly Sandy 10.00" என்றும், அதன் பின்புறம் பென்சிலால் 10 என்று எழுதி வட்டமிடப்பட்டிருந்தது. அந்த கவரை சாட்சிகளின் முன்னிலையில் பிரித்து பார்த்தபோது, அதில் 500 ரூபாய் நோட்டுகள் 20 கத்தைகள் இருந்தது. அதில் ஒவ்வொரு கத்தையிலும் 100 நோட்டுகள் இருந்தது. (500 X 2000) ஆகமொத்தம் ரூ.10 லட்சம் இருந்தது. இரண்டாவது கவரில் ஒரு புறத்தில் பென்சிலால் " Erode District - Sivagiri – KNMT Weekly Sandy 10.00" என்றும், அதன் பின்புறம் பென்சிலால் 10 என்று எழுதி வட்டமிடப்பட்டிருந்தது. அந்த கவரை சாட்சிகளின் முன்னிலையில் பிரித்து பார்த்தபோது, அதில் 500 ரூபாய் நோட்டுகள் 20 கத்தைகள் இருந்தது. அதில் ஒவ்வொரு கத்தையிலும் 100 நோட்டுகள் இருந்தது. (500 X 2000) ஆகமொத்தம் ரூ.10 லட்சம் இருந்தது. மூன்றாவது கவரில் ஒரு புறத்தில் பென்சிலால் " Erode District Sivagiri – KNMT - Weekly Sandy" என்றும் 11.19 என்று எழுதி வட்டமிடப்பட்டும் காணப்பட்டது.

அதன் பின்புறம் பென்சிலால் 11.19 என்று எழுதி வட்டமிடப்பட்டிருந்தது. அந்த கவரை சாட்சிகளின் முன்னிலையில் பிரித்து பார்த்தபோது, அதில் 500 ரூபாய் நோட்டுகள் 23 கத்தைகள் இருந்தது. அதில் 22 கத்தைகளில் ஒவ்வொன்றிலும் 100 நோட்டுகளும் ஒரு கத்தையில் 38 நோட்டுகளும் இருந்தது. (500 X 2238) ஆகமொத்தம் ரூ.11.19 லட்சம் இருந்தது. மேலும், மற்றொரு பெரிய பச்சை நிற A3 சைஸ் அளவுள்ள கவரை பார்வையிட, அதன்மீது A4 சைஸ் வெள்ளை தாளில் " Erode District Vadugapatti & Kollankovil KNMT & TURIP Work - Rs 12.23 Lakhs" என்று பென்சிலால் எழுதப்பட்டு, கவரின் மீது ரப்பர்பேண்டால் கட்டப்பட்டிருந்தது. அந்த கவரின் பின்புறத்தில் " SBC 12,23 L" என்று பென்சிலால் எழுதப்பட்டிருந்தது. அந்த கவரை சாட்சிகளின் முன்னிலையில் பிரித்து பார்த்தபோது, அதில் 2000 ரூபாய் நோட்டு கட்டு ஒன்றும், 500 ரூபாய் நோட்டுகள் 23 கத்தைகளும் இருந்தது. அதில் 2000 ரூபாய் நோட்டுகள் கொண்ட கத்தையில் 50 நோட்டுகளும், 500 நோட்டுகள் கொண்ட 22 கத்தைகளில் ஒவ்வொன்றிலும் 100 நோட்டுகளும் ஒரு கத்தையில் 46 நோட்டுகளும் இருந்தது. (2000 X 50, 500 X 2246) ஆகமொத்தம் ரூ.12.23 லட்சம் இருந்தது. மேற்படி தொகைகள் ரூ.7,90,000/- ,ரூ.10,00,000/-,ரூ.10,00,000/-,ரூ.11,19,000/- மற்றும் ரூ.12,23,000/- ஆக மொத்தம் ரூ.51,32,000/- (2000 X 50, 500 X 10064) லஞ்சமாக ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட பணம் என்பதால் விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும் மேலே சொன்னவாறு தொகைகள் வைக்கப்பட்டிருந்த 5 கவர்கள், விபரம் குறிக்கப்பட்டிருந்த 2 தாள்கள், ராமர் பச்சை நிறம் கொண்ட ஒரு துணிப்பை மற்றும் TNPL A4 size Paper வைக்கும் கவர் ஒன்றும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திருமதி.ஆர்.நீலாவதி அவர்களிடம் ஒப்பந்ததாரர்களிடமிருந்து எத்தனை சதவீதம் கமிசனாக பெறப்பட்டு வருகிறது என்பது சம்மந்தமாக விசாரித்தபோது, ஒவ்வொரு வேலைகளுக்கும் அதற்கேற்றவாறு கமிசன் தொகைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும், இதை கணினியில் பதிவு செய்து வைத்துள்ளதாக தெரிவித்து, அந்த அலுவலக கணினியில் இருந்து ERODE DISTRICT – TOWN PANCHAYATS ADMINISTRATION KNMT Roads – 2021-22 என்று தலைப்பிடப்பட்ட 2 தாள்கள்,ERODE DISTRICT – TOWN PANCHAYATS ADMINISTRATION KNMT Roads – 2021-22 (Other than Roads) என்று தலைப்பிடப்பட்ட 1 தாள்,ERODE DISTRICT – TOWN PANCHAYATS ADMINISTRATION TURIP 2021-23 என்று தலைப்பிடப்பட்ட 1 தாள்,ERODE DISTRICT – TOWN PANCHAYATS ADMINISTRATION Capital Grant Fund – 2021-22 என்று தலைப்பிடப்பட்ட 1 தாள்,TIRUPPUR DISTRICT – TOWN PANCHAYATS ADMINISTRATION KNMT Roads – 2021-22 என்று

தலைப்பிடப்பட்ட 1 தாள் ஆகியவற்றை அந்த அலுவலகத்தில் தற்காலிக பணியாளராக பணிபுரியும் திருமதி.மைதிலி, க/பெ சுரேஷ் என்பவர் மூலம் பிரிண்ட் எடுத்து ஆஜர் செய்தார். அதில் உதவி செயற்பொறியாளர் திரு.நாகராஜன், இளநிலை பொறியாளர் திருமதி. நீலாவதி, திருமதி.மைதிலி ஆகியோரிடம் கையொப்பம் பெற்று, அதன்பின்னர் அதில் அரசு சாட்சிகள் இருவர், காவல் ஆய்வாளர் திருமதி எம்.ரேகா மற்றும் நான் சான்றொப்பம் செய்து விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும் கம்பியூட்டர் ஆபரேட்டராக தற்காலிகமாக பணிபுரியும் திருமதி.மைதிலி என்பவருக்கு சம்பளமாக ரூ.8000/-ஐ உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஹெட்கிளார்க்காக பணிபுரியும் திரு.சுரேஷ் என்பவர் கொடுத்துவருவதாகவும் அந்த அலுவலகத்தில் தொழில்நுட்பம் சம்மந்தமான அதாவது மதிப்பீடு போடுவது மற்றும் இதர பணிகள் செய்துவரும் வெங்கடேஷ்பிரபுவுக்கு மாதம் ரூ.10000/- சம்பளமாக இளநிலை பொறியாளர் திருமதி.நீலாவதி கொடுத்து வருவதாகவும் திடீர் தணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டது.திடீர் தணிக்கை சம்மந்தமாக ஒரு நடவடிக்கை குறிப்பை சாட்சிகள் திரு.இரா.அறிவழகள், திரு.ஜெ.முகமது இத்திஸ், ஆய்வாளர் திருமதி ரேகா, ஆகியோர்கள் முன்னிலையில் தயாரிக்கப்பட்டு அனைத்து பக்கங்களிலும் கையொப்பங்கள் பெற்று கடைசி பக்கத்தில் சம்மந்தப்பட்ட நபர்கள் அனைவரிடமிருந்தும் கையொப்பங்கள் பெற்றேன். அதன் நகல் ஒன்று உதவி செயற்பொறியாளர் திரு.நாகராஜன் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. திடீர் தணிக்கையின் போது திரு. R.நாகராஜன், உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள்,ஈரோடு மண்டலம், திருமதி.R.நீலாவதி, இளநிலை பொறியாளர் / வரைவாளர் (பொறுப்பு), திரு.க.செல்லமுத்து, இளநிலை பொறியாளர், திருமுருகன்பூண்டி பேரூராட்சி, திருப்பூர் மாவட்டம்,திரு. M.செல்வம், எலக்ட்ரீசியன், மூலனூர் பேரூராட்சி, திருப்பூர் மாவட்டம்ஆகியோர்கள்7 (a) of PC Act as amended in 2018ன் படி குற்றம் புரிந்துள்ளதாக தெரியவந்தது. மேலும் திரு. T.வெங்கடேஷ் பிரபு த/பெ தங்கவேல், கதவு எண்.164 A, பெரியார் நகர், பள்ளிபாளையம், நாமக்கல் மாவட்டம் என்பவர் 12 r/w 7 (a) of PC Act as amended in 2018ன் படி குற்றம் புரிந்துள்ளதாக தெரியவந்தது. திடீர் தணிக்கையில் கண்டுபிடித்த குற்றம் சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, இன்று 23.12.2021காலை 10.00 மணிக்கு,ஈரோடு ஊ.த.க.பிரிவு குற்ற எண்.13/2021/AC/ER, U/s 7 (a), 12 r/w 7(a) of PC Act as amended in 2018 யின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின் அசலை முதன்மை குற்றவியல் நடுவர் மற்றும் தனி நீதிபதி,ஈரோடு அவர்கள் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டன.

23.12.21
DSP/V&AC/Erode